செ.வெ.எண்: 29 நாள்: 24.06.2020

# அரியலூர் மாவட்டம்

## அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.1000/- நிதியுதவிக்கான தொகையினை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் வழங்கினார்கள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.1000/- நிதியுதவிக்கான தொகையினை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று (24.06.2020) வழங்கி, தொடங்கி வைத்தார்கள்.

**இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் தெரிவித்ததாவது,**

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சீரிய வழியில் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசு மாற்றுத்திறனாளிகளுக்காக பல எண்ணற்ற சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

அரியலூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 3757 மாற்றுத்திறனாளிகளுக்கு மாதம் தலா ரூ.1500/- வீதம் பாராமரிப்பு உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. மேலும், 154 மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச பேருந்து பயண அட்டை வழங்கப்பட்டுள்ளது. ஊரடங்கு காலத்தில் மாற்றுத்திறனாளிகள் தேவைப்பட்ட அத்தியாவசியப்பொருட்கள் மருத்துவ உபகரணங்கள் போன்றவைகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டதை தொடர்ந்து, மாற்றுதிறனாளிகளின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டை வைத்துள்ள அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளுக்கும் தலா ரூ.1000/- நிவாரணத்தொகை அவரவர் வீட்டிலே வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

அதன்படி, அரியலூர் மாவட்டத்திலுள்ள 14,174 அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.1000/- வீதம் ரூ.1 கோடியே 41 இலட்சத்து 74 ஆயிரம் நிவாரணத்தொகை வழங்கப்படவுள்ளது. மாற்றுத்திறனாளிகள் அனைவரும் தங்கள் அசல் தேசிய அடையாள அட்டை காண்பித்து, அதன் நகலினை நிவாரண தொகை வழங்கும் அலுவலரிடம் சமர்ப்பித்து நிவாரணத்தொகை ரூ.1000/- பெற்றுக்கொள்ளவும். இந்தப்பணி அந்தந்த பகுதி கிராம நிர்வாக அலுவலர்கள் மூலம் அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளின் வீடுகளுக்கே சென்று வழங்கப்படும் என மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் பொ.சந்திரசேகர், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.சுந்தர்ராஜன், கோட்டாட்சியர் ஜெ.பாலாஜி, மாற்றுத்திறனாளி நல அலுவலர் இ.பொம்மி, மற்றும் அலுவலர்கள், மாற்றுத்திறனாளிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**